# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை : 100/= இதழ் 107 26.04.2025




# பனை எங்கள் முதுசம்.....

- வீட்டுத் தோட்டம் அமைப்பது மிகவும் சுலபம்!
  – வழிகாட்டும் தமிழர் பொருண்மியம்
- தமிழர்களின் பொருளாதாரத்திற்கு தூபமிடும் சங்குல குளத்திற்கு சங்கு ஊதுவதற்கு முயற்சியா?
- சுற்றுலாப் பயணிகளைக் கவரும் புறா மலை
- இந்தப் பூமி நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறது
- எலோன் மஸ்க் மற்றும் டெஸ்லா வாகனத் தொழிலில் புரட்சி
- பார்வை

# வீட்டுத் தோட்டம் செய்வது சுலபமானது....

## வழிகாட்டும் தமிழர் பொருண்மியம்







**தோட்டம் என்றதும் பலர் ஏதோ
அதற்கு நிறைய
இடம் வேண்டும்,
நிறைய செடி கொடிகள்
இருந்தால்தான் அது தோட்டம்
அதெல்லாம் இன்றைய நகர
வாழ்க்கையில் சாத்தியமில்லை
என்று நினைக்கிறோம்.
நமக்கு தேவையான நான்கு
செடிகள் இருந்தாலே
அது வீட்டு தோட்டம் தான்.
உதாரணத்திற்கு
கற்றாழை, துளசி, கற்பூரவள்ளி,
கருவேப்பிலை
இப்படி எந்த பெரிய பராமரிப்பும்
இல்லாத இந்த நான்கு செடிகள்
இருந்தாலே நாமும்
வீட்டு தோட்டம்
வைத்திருப்பவர் தான்.**

சென்ற வாரம் வீட்டுத்தோட்டத்தில் கிடைக்கும் நன்மைகளையும் அதனால் ஏற்படும் உடல் ஆரோக்கியத்தையும், இன்றைய சூழலுக்கு அவசியமானவையும் பார்த்தோம்.

இந்த வாரம் எளிமையாக இருக்கும் இடத்தில் எவ்வாறு வீட்டு தோட்டத்தை அமைப்பதுஇ என்னென்ன பொருட்களை பயன்படுத்தி வீட்டுத்தோட்டம் அமைப்பது என்பதையும் வீட்டுத் தோட்டத்திற்கு மிக முக்கியமான மண்ணை பற்றியும் தெரிந்து கொள்வோம்:

யாருக்குதான் மரஞ் செடிகளைப் பிடிக்காது. என்ன... இன்றைய நவீன உணவுகளால் ஏற்படும் உடல் அசதி, வேலை பளு, சோம்பல் போன்றவற்றால் எதையும் செய்ய மனமில்லாத ஒரு நிலை பலரின் மத்தியிலும் உள்ளது. யாராவது நம் வேலைகளையெல்லாம் செய்து கொடுத்தால் போதும், ஒரு கையில் மொபைல், மறுகையில் நொறுக்குத்தீனி, எதிரிலோ தொலைக்காட்சி... இதற்கெல்லாம் காரணம் முழுக்க முழுக்க நம்முடைய வாழ்க்கை முறையும் உணவு பழக்கமும் தான் என்பதை மறந்துவிடக் கூடாது.

குறிப்பாக நச்சுகள், ரசாயனங்கள் மற்றும் பலவகையான உணவு ரசாயன சேர்க்கைகள் தான் காரணம். இதிலிருந்து வெளிவரவும், ஆரோக்கியமான குடும்ப சூழல், உடல் நிலை பெறவும் அவசியமாகிறது வீட்டில் நமக்கான தோட்டம்.

சரி... தோட்டம் என்றதும் பலர் ஏதோ அதற்கு நிறைய இடம் வேண்டும், நிறைய செடி கொடிகள் இருந்தால்தான் அது தோட்டம் அதெல்லாம் இன்றைய நகர வாழ்க்கையில் சாத்தியமில்லை என்று நினைக்கிறோம். நமக்கு தேவையான நான்கு செடிகள் இருந்தாலே அது வீட்டு தோட்டம் தான். உதாரணத்திற்கு கற்றாழை, துளசி, கற்பூரவள்ளி, கருவேப்பிலை இப்படி எந்த பெரிய பராமரிப்பும் இல்லாத இந்த நான்கு செடிகள் இருந்தாலே நாமும் வீட்டு தோட்டம் வைத்திருப்பவர் தான்.

### செடி வளர்க்க இடத்தேர்வு:

செடிகளை வளர்க்க எந்த பிரத்யேக இடமும் தேவையில்லை. சாதாரணமாக சூரிய ஒளி படக்கூடிய வீட்டு வாசற்படி யருகில், ஜன்னல்கள், வராண்டா, மொட்டை மாடி என வீட்டை சுற்றி இருக்கும் எந்த இடத்தையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

### செடி வளர்க்க தேவைப்படும் தொட்டிகள்:

இதற்கென்று பிரத்யேகமாக சந்தையில் கிடைக்கும் தொட்டிகளைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. வீட்டில் இருக்கும் உடைந்த டப்பாக்கள், வாளிகள், பழங்கள் வாங்கிய மரப்பெட்டிகள், அரிசி சாக்கு பைகள், மறுசுழற்சி செய்யவேண்டிய சாதாரண நெகிழி, குடிநீர் பாட்டில்கள் என ஆரம்பத்தில் செலவின்றி ஒரு கொள்கலன்களை தேர்வு செய்து தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அவற்றில் மிக முக்கியமானது எந்த கொள்கலனாக இருந்தாலும் அவற்றின் அடியில் சுற்றளவுக்கு ஏற்ப நீர்வடிகால் வசதி செய்யவேண்டும். அதாவது செடிகளுக்கு ஊற்றப்படும் தண்ணீர் தொட்டிக்குள் தேங்கிவிடாமல் வெளியேற சிறுசிறு துளைகள் இடவேண்டும்.

### மண் வளம்:

அடுத்ததாக செடிவளர்க்க மிக முக்கியமான மண்ணைப்பற்றிதெரிந்துகொள்வோம்.இன்றையதொழில் நுட்பங்கள் மண்ணில்லாத விவசாயம், மண்ணில்லாத தோட்டம் என்றெல்லாம் பல சாகசங்களை செய்துதான் வருகிறது. அதற்கெல்லாம் நாமும் பலியாகிவிடக் கூடாது.

செடிவளர்ச்சிக்கு மிகமிக முக்கியமானது பஞ்சபூதங்களின் ஒன்றான மண்.. இந்த மண்ணில் விளையும் பொருட்களை உண்டு நம் உடலை வளர்ப்பதாலேயே நம் உடலுக்கு அன்னமயகோசம் என்ற பெயருண்டு. இயற்கையாக மண்ணிலிருக்கும் பல தாதுக்கள் நேரடியாக நமது காய்கனி, தானியங்களுக்கு கிடைக்கப் பெற்று அவற்றை நாம் உண்பதால் பலவகையான தாது குறைபாட்டு நோய்களில் இருந்து நம்மை காத்துக் கொள்ளலாம். உதாரணத்திற்கு சாதாரணமாக நம் கடல், காற்று, மண் ஆகியவற்றில் கொட்டிக்கிடக்கும் அயோடின் என்ற தாது நம் காய்களிலும் பொதுவாக நிரம்பியிருக்க வேண்டிய ஒன்று.. ஆனால் இந்த நவீன விவசாயத்தாலும், ரசாயனங்களைக் கொண்டும் வளர்க்கப்படும் இன்றைய காய்களில் இந்த அயோடின் தாது பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது. இதனால் அதிகளவில் நம்மவர்கள் தைராய்டு நோய்களுக்குள்ளாகின்றனர். இதைபோல் பல நோய்களிலிருந்து நம்மை காத்துக்கொள்ள கட்டாயம் இயற்கையான மண்ணில்தான் செடிகளை வளர்க்கவேண்டும்.

### செடிகளுக்கு தேவையான மண்கலவையை எவ்வாறு தயாரிப்பது.

மண்ணும் மணலும் அதனுடன் குப்பைகளும் சேர சிறந்த செடி வளர்ச்சியை பெறலாம். இன்றைய சூழலில் இருக்கும் மண் தட்டுப்பாடு காரணமாக இந்த முறையில் இன்னும் சிலவற்றை சேர்த்து மண்கலவையினை தயார் செய்யலாம். வளமான மண் அல்லது செம்மண் ஒரு பங்கிற்கு மண்புழு உரம் (வரும் இதழ்களில் வீட்டுக் காய்கறி கழிவிலிருந்து மண்புழு உரம் தயாரிப்பு முறையை தெரிந்துகொள்ளலாம்) ஒரு பங்கும், மக்கிய எரு ஒருபங்கும், கறித்தூள், சாம்பல் அல்லது மணல் மற்றும் சுற்றுப்புறத்தில் கிடைக்கும் சிறிது மண் ஒருபங்கும்இ இலைதழை, மக்கும் குப்பை அல்லது தேங்காய் நார்கழிவு ஒருபங்கும் என ஐந்து பங்குகளையும் ஒன்றாக சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். இதனுடன் சிறிதளவு வேப்பம்புண்ணாக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த மண்கலவையினை நமது கொள்கலன்களில் அல்லது மண் தொட்டிகளில் நிரப்பவேண்டும். இந்த மண் கலவை செடிகளுக்கு சிறந்த வளர்ச்சியினை அளிக்கக் கூடியதாக இருக்கும்.

அடுத்த இதழில் இந்த மண்கலவையில் எவ்வாறு விதைப்பது என்பதையும் விதைகளைப்பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

# தமிழர்களின் பொருளாதாரத்திற்கு தூபமிடும் சங்குல குளத்திற்கு சங்கு ஊதுவதற்கு முயற்சியா?



மணிநீரும் மண்ணும் மலையும்
அணிநிழற் காடும் உடையது அரண்'

மணிபோல் தெளிந்த நீர் நிலைகளை உடைய அகழியும், வெளி நிலமும், மலையும், அணிகளும் போன்ற அழகிய நிழல் தரும் காடுகளையும் உடையதே சிறந்த அரணாகும். இப்படிப்பட்ட இயற்கையான அரண்களை உடைய நாடே பாதுகாப்பானதாகும். காடும்இ நீர்நிலைகளும் வாழ்ந்தால் நாடு செழிக்கும் என்பதே நிதர்சனம். என திரவள்ளுவப் பெருந்தகை மேற்படி குறளின் வாயிலாக மிகத் தெழிவாக இவ்வுலகிற்கு எடுத்தியம்பியுள்ளார்.

மாரி காலத்தில் பெய்யும் மழைநீரைச் சேமித்து வைத்து வருடத்தின் ஏனைய 10 பாதங்களும் தமது வாழ்வாதாத்திற்காக பயன்படுத்தி வரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேசத்திற்குட்பட்ட பாலர்சேனைக் கிராம மக்களுக்கு ஓர் பேரிடி ஏற்பட்டுள்ளது. அது அப்பகுதி வாழ்வாதாரத்திலும், பொருளாதாரத்திலும் பொரும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வேப்பவெட்டு வான் பிரதேசத்தின் சங்குல குளத்தை நம்பி பாலர்சேனை கிராமத்திலுள்ள சுமார் 412 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.


ஆண்டாண்டு காலமாக அங்கு வாழ்ந்து வரும் மக்கள் பிரதானமாக குடிநீருக்காகவும், விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற தங்கள் ஜீபனோபாய தொழில்களுக்காகவும் இந்த சங்குல குளத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

பிரதான நீர் ஆதாரங்களுக்கென கோடை காலங்களில் அந்த மக்கள் அக்குளத்தையே நம்பி இருப்பதால் இராஜாங்க அமைச்சராக சதாசிவம் வியாழேந்திரன் அவர்கள் பதவி வைத்த காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தக் குளம் புனரமைக்கப்பட்டிருந்தது.

பின்பு இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராக இருந்தபோது இக்குளத்தை மேலும் புனரமைப்பதற்காக 14 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அதனூடாக குளத்தின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் வெளிப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் குளத்தின் நீரேந்தல் பகுதிக்குள் தனக்கு உரிய காணி இருப்பதாக கூறி விடயத்தை திரிவுபடுத்தி சட்டநடவடிக்கைக்கு முஸ்த்தீப்பு செய்ததனால் அப்பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

அடாத்தாக குளத்தின் நீரேந்தல் பகுதியில் காணியை கையகப்படுத்துவதற்காக அவரது அரசியல் பலத்தைக் கொண்டு முற்படும் அந்த நபர் தடுப்பணைகளை அடாவடித்தனமாக உடைத்து சேதப்படுத்தி நீரை வெளியேற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.



குளத்தின் நீர் வீண்விரயமாக வெளியேறி வருகிறது. குளத்திலுள்ள நீர் இவ்வாறு வெளியேற்றப்படுமாக இருந்தால் நீர்தாட்பாடு காரணமாக அக்கிராமத்தில் இருந்து வெளியேற வேண்டிய அபாயம் ஏற்படும் என அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாலர்சேனை கிராமத்திற்கு கிடைத்தது இந்த சங்குலக் குளம் ஆகும். எங்களுடைய கிராமத்தில் 412 குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். அவர்கள் அனைவரும் இந்த குளத்தை நம்பியேதான் தமது வாழ்வாதார தொழில்ளை மேற்கொண்டு வருவதுடன். பொருளாதாரமும் தங்கியுள்ளது. சேனை பயிற்செய்கை, வீட்டுத்தோட்டம், கால்நடை வளர்ப்பு, உள்ளிட்ட அனைத்து வாழ்வாதாரங்களும் இந்த குளத்தை நம்பியே எமது கிராம மக்களின் வாழ்வு உருண்டு கொண்டு செல்கின்றன. மாரிகாலம் முடிவடைந்ததும் ஏனைய நாட்களில் குடிநீர் பிரச்சினை நிலவத்துவங்கும், இதனால் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரும் நீர் பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இக்குளத்தை தற்போது ஓரளவு புனரமைப்பு செய்து தந்திருக்கின்றார்கள் அதற்காக அரசாங்கத்திற்கும் அதனை முன்னின்று செயற்படுத்தியவர்களுக்கும் நாங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். ஆனாலும் தற்போது நாங்கள் மிகப் பெரியதொரு பிரச்சனையை எதிர்கொண்டிருக்கின்றோம். வெளிபிரதேசத்தை சேர்ந்த ஒருவர் இங்கு வந்து எமது கிராமத்தில் அமைந்துள்ள குளத்தினுள் அந்த நபருக்கு காணி இருப்பதாக கூறி எனது கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க முயன்றுள்ளார்.



அதனை விட குளத்தின் துருசுப் பகுதியையும் உடைத்து தேக்கி வைத்திருக்கின்ற நீரை வெளியேற்றுகின்றார். இதற்காக சில அரசியல்வாதிகளும் துணைபோவதாகவும் நாங்கள் அறிகின்றோம். இதனை ஜனாதிபதி அவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் இதனை கருத்திற் கொண்டு எமது கிராமத்தில் வாழ்கின்ற 412 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கும், 2800 இற்கும் மேற்பட்ட மக்களும் வாழ்வாதாரமாக காணப்படுகின்ற இந்த குளத்தை யாரும் சூறையாடுவதற்கும், கபளீகரம் செய்வதற்கோ இடம் கொடுக்கக்கூடாது என்பதை

நாங்கள் தெரிவித்துக் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே குளத்தை சூறையாடுவதற்காக முயற்சித்துள்ள நபர் மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கையை அதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். என்பதையும் எமது மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு செயல்படுமாறு நாங்கள் தயவாக கேட்டுக் கொள்கின்றோம். என தெரிவிக்கின்றார் அக்கிராமத்தைச் சேர்ந்த கிராமவாசிகள்.

நாங்கள் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக இந்த கிராமத்தில் வசித்து வருகின்றோம் நீர் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துள்ளோம். இதற்காக வேண்டி எமக்கு உறுதுணையாக இருப்பது எனது கிராமத்திலே அமைந்திருக்கின்ற சங்குல குளம்தான். பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளிட்ட பலரும் எமது கிராமத்தில் நீர் பிரச்சனை உள்ளிட்ட பலவற்றிக்கு முகம் கொடுத்து வருகின்றோம். எனது கிராமத்தில் உள்ள அனைவரும் விவசாயத்தையே வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகின்றோம். எனவே யாருக்காகவும் எமது கிராமத்தின் வளத்தை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது. எனக்கு குடிநீர்தான் மிக முக்கியமானதாகும். இதனை யாரும் பறித்தெடுக்க முடியாமல் எமது கிராமமக்களுக்கு நிரந்தரமாகவே பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துதர வேண்டும் எனவே இந்த குளத்தை உடைத்து நிலப்பகுதியை சூறையாடுவதற்கு யாருக்கும் அனுமதி வழங்கக் கூடாது. நாங்கள் காட்டு யானைகளுக்குப் பயந்து இரவும் பகலுமாக இதில் மிகவும் பிரயத்தனம் செய்து வருகின்றோம். நாங்கள் கேட்பதெல்லாம் உணவோ உடைகளையோ கேட்கவில்லை எனக்கு சுத்தமான குடிநீரை பெற்று தருவதற்குரிய இந்த குளத்தையே புனரமைத்து தந்து இந்த குளத்தை சூறையாடும் நபரிடம் இருந்து விட்டுத் தருமாறுதான் நாங்கள் கேட்கின்றோம். எங்கள் கண்முன்னே வந்து இந்த குளத்தை உடைத்து விட்டு செல்கின்றார்கள் எம்மை ஏன் அதிகாரிகள் பாராமுகமாக இருக்கின்றார்கள் என தெரியாது உள்ளது. ஏசி காற்றில் வாழ்க்கையைக் கழிக்கின்றவர்களேதான் எமது கிராமத்துக்குள் வந்து கிராமத்தில் இருக்கின்ற குளத்தை அடாத்தாக பிடிக்க நினைக்கின்றார்கள். எனவே இதற்கு யாரும் துணை போகாமல் எமது குளத்தை மீட்டுதர வேண்டும் என அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றார்கள்.



எமது கிராமத்தில் இருக்கின்ற குளத்தை அழிக்கிறார்கள் இதனால் எமது விவசாய நிலங்கள் கெட்டுப் போகின்றன குளம் மக்களுக்குரிய குளமாகும் இதனை அழிப்பதற்கு யாருக்கும் அருகதை இல்லை. இதற்கு வேறு இடத்தில் இருந்து வந்த ஒருவர் குளத்திற்கு உரிமை கொண்டாடுகின்றார். இதனால் எமது கிராமம் அழியப் போகின்றதோ என அச்சமாக இருக்கின்றது. அரசாங்கமும் அரசியல்வாதியும் இதற்கு ஏன் எமக்கு நிரந்தர தீர்வை பெற்று தருகின்றார்கள் இல்லை என எமக்கு ஆதங்கமாக இருக்கின்றது. இதற்குரிய தீர்வை பெற்று தரவேண்டும் குளத்தை யாரும் சூறையாடுவதற்கோ குளத்தை உடைத்து விட்டு செல்வதற்கு யாருக்கும் அனுமதிக் வழங்கக்கூடாது.

எமது கிராமத்துக்கு உரித்தான குளத்தை வேறு எங்கோ இருந்து வந்த நபர் குளத்திற்குச் சொந்தம்

கொண்டாட முனைகின்றார். அதுமாத்திரமின்றி குளத்தை உடைத்து விட்டும் செல்கின்றார். கிராமத்து மக்கள் நில வளம் இருந்தும் பயிர் செய்ய முடியாத அளவுக்கு இந்த குளத்தை நிலைமையை இட்டுச் செல்கின்றனர். இதனை எங்கேயோ இருந்து வந்த ஒருவர் அதனை உடைத்து விட்டு செல்வதற்கு உரிய உரிமையை அவருக்கு யார் வழங்கியது. அது எமது கிராமத்து மக்களின்



சொத்து ஆகும். அதனை கூறையாடுவதற்கும், உரிமை கொண்டாடுவதங்கும் யாருக்கும் உரிமை இல்லை.

இந்தக் குளத்தை அத்துமீறி அடாத்தாக பிடித்து சொந்தம் கொண்டாட நினைப்பவர்கள் எமது வாழ்க்கையில் மண்ணை அள்ளித் தூவ நினைக்கின்றார்களோ என எண்ண தோன்றுகின்றது. இந்த குளத்தை இனிமேலும் உடைக்க முடியாத அளவுக்கு சம்பந்தப்பட்டவர்கள் இதனை உயரமாக புணரமைத்துதர வேண்டும். அதேபோல் குளத்தை பாதுகாத்துதர வேண்டும் வெளிப் பிரதேசத்தைச் சேர்ந்த தனி ஒருவரின் இலாபத்திற்காக 400க்கும் மேற்பட்ட எமது குடும்பங்களை அழிக்க நினைக்கின்றார்.

சங்குல குளத்தில் தேக்கி வைக்கப்படும் நீரில் மேலதிகமான நீர் வழிந்தோடுவதற்குரிய துதுசுப் பகுதியை யாரோ கொங்றீட் போட்டு நரந்தரமாக அடைத்துள்ளார்கள். இது சட்டவிரோதமான செயலாகும். இதனை நிரந்தரமாக அடைக்க வேண்டும் என யாராவது நினைத்தால் அதனை உத்தியோக பூர்வமான அனுமதி பெற்று மேற்கொள்ளலாம். மாறாக யாரோ எமது திணைக்களத்திற்குச் சொந்தமான இக்குளத்தின் துருசுப் பகுதியை அடைத்துள்ளயை உடைப்பதற்காக நாம் வியாழக்கிழமை (17.04.2025) சென்றோம் அதனை அப்பகுதி மக்கள் தடுத்துவிட்டார்கள் நாம் திரும்பி வந்துவிட்டோம். என அக்குளத்திற்குப் பொறுப்பாகவுள்ள கமநல திணைக்களத்தின் அப்பகுதிக்குரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் சங்குல குளம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ்தான் வருகின்றது. குளத்திற்குள் வரும் காணிக்குரிய பொறுப்பும் அத் திணைக்களத்திற்குள்தான் வரு கின்றன. எனினும் அப்பகுதியில் அமைந்துள்ள காணியை அளவீடு செய்வதற்குரிய நடவடிக்கையை நாம் மேற்கொண்டுள்ளோம். அந்த காணி அளவீடு நிறைவடைந்ததும், அதனை நாம் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒப்படைக்கவுள்ளோம் என ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

பாலர்சேனை கிராமத்திற்குள் உள்ளடக் கப்பட்ட இக்குளம்தான் எமது சங்குல குளமாகும் அதனை வெளிப் பிரதேசத்தில் இருந்து வந்த ஒருவர் அடாத்தாக பிடித்து குளத்தை உடைப்பதற்காக முன் நின்று வந்தால் எமது வாழ்வாதாரமான விவசாயம் பாதிக்கப்படும். குடிநீர் பாதிக்கப்படும், எனவே 108 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டமைந்த இந்த குளத்தை உரிய முறையில் பாதுகாத்து எனது கிராம மக்களின் நிரந்தர சொத்தாக மாற்றி இதனை அடாத்தாகவோ சூறையாடவோ யாருக்கும் இடம் கொடுக்காமல் அவர்களிடமிருந்து மீட்டு தருமாறு அந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அப்போதுதான் அப்பகுதி மக்களின் நீடித்துநிலைத்திருக்கு வாழ்வாதாரமும், பொருளாதாராத்திலும் முன்னேறும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.



வ.சக்திவேல்
*சமூக ஆய்வாளர்*



# சுற்றுலாப் பயணிகளை கவரும் (புறாமலை) புறாத்தீவு தேசியப் பூங்கா

இயற்கை எழில் கொஞ்சும் திருகோணமலை மாவட்டம் பல சுற்றுலா பிரதேசங்களை தன்னகத்தே கொண்ட இயற்கையாய் அமைந்த ஒரு பிரதேசமாக நிலாவெளி புறாமலை காணப்படுகிறது.திருகோணமலை நகரில் இருந்து சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் இது அமையப்பெற்றுள்ளது.

உல்லாசப் பயணிகள் இலங்கையை நோக்கி படை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். யுத்த காலத்தின் பின் வருகை அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இலங்கையின் இயற்கை அழகு அவர்களைக் கவர்ந்து இழுக்கிறது. விடுமுறையைக் கழிப்பதற்காக அக் காலங்களில் பெரும் தொகையாக வருகின்றார்கள்.

கிழக்கு இலங்கையின் இயற்கை எழில் அனைவரையும் தன்வசம் இழுத்துக் கொள்ளும். அழகு கொஞ்சும் மாவட்டமாக திருகோணமலை விளங்குகிறது.

“படகுப் பயணம் சூரியக் குளியல் நீச்சல் ஆகியவற்றிற்கு சிறந்த இடம்.

திருகோணமலையில் இருந்து வடமேற்கில் அமைந்துள்ளது நிலாவெளி.

இது கரையோரப் பிரதேசமாக இருக்கிறது.

இங்கு கடலில் மீன்பிடித்தொழில் நடைபெறுகிறது.

மிகச் சிறந்த சுற்றுலாத் தளங்களில் ஒன்று.

நட்சத்திர சுற்றுலா விடுதிகள் பலவும் இங்குள்ளன.

சுனாமியின் தாக்கமும் இங்கு அதிகம் ஏற்பட்டு காலப்போக்கில் மாற்றம் பெற்றுள்ளது.

நிலாவெளிக் கடற்கரையில் இருந்து புறாமலை ஒரு „ கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

நிலாவெளிக் கடற்கரை மிகவும் அழகானது. அதற்கு மேலும் அழகு ஊட்டி நிற்பது புறாமலை.

முன்னர் மக்கள் தனியாரின் படகுகளில் சென்று குளித்து சாப்பிட்டு மகிழ்ந்து வருவார்கள். புறாமலை என்று சொன்ன போதும் இவற்றில் இரண்டு தீவுகள் உள்ளன. பெரிய தீவு சுமார் 200 மீற்டர் நீளமும் 100 மீற்றர் அகலமும் கொண்டது.

இப்பொழுது இவ்விடம் தேசிய விலங்கு சரணாலயமாக மாற்றப்பட்டுள்ளது. படகு போக்குவரத்து நடாத்துகின்றார்கள்.

மலையைச் சுற்றி ஆழம் குறைந்த கடல். அழகிய முருகை கற்களோடு கூடியது. கற்களைப் பாரத்து இரசிக்கலாம்.

புறாக்கள் அக் காலத்தில் இங்கு நிறைந்திருந்ததால் புறாமலை என்ற பெயர் வந்தது.

இங்கு 100 வகையான பவளப் பாறைகளும் முன்னூறு வகையான பவள பாறை மீன்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

சூரிய ஒளியில் Glittering coral சிறு சிறு வர்ணக் கற்கள் தெறிக்கும் அழகே தனிதான். நீரினுள் கடல் வாழ் மீன்கள் உயிரினங்கள் நீந்திச் செல்வதை கண்டு மகிழலாம்.

புறாத்தீவு தேசியப் பூங்கா (Pigeon Island National Park, உள்ளூர் வழக்கு: புறா மலை) என்பது இலங்கையிலுள்ள இரு கடல்சார் தேசியப் பூங்காக்களில் ஒன்று.

இத்தேசியப் பூங்கா இலங்கையிலுள்ள சிறந்த பவளப் பாறைகள் சிலவற்றைக் கொண்டுள்ளது. புறாத்தீவு 1963இல் புகலிடமாகக் குறிக்கப்பட்டது. 2003 இல் தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டது.

இத்தேசியப் பூங்கா இலங்கையில் 17வது தேசியப் பூங்காவாகும். பிரித்தானிய இலங்கையில் இது சுடு பயிற்சித் தளமாகப் பயன்படுத்தப்பட்டது.

புறாத்தீவு 2004 இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட இடங்களில் சிலவற்றில் ஒன்றாகும்.

புறாத்தீவு இரு தீவுகளைக் கொண்டு, பெரிய புறாத்தீவும் சிறிய புறாத்தீவும் ஆக காணப்படுகின்றது. பெரிய புறாத்தீவு கரையில் பவளப் பாறைகளைக் கொண்டுள்ளது.

சிறிய புறாத்தீவு பாறை திட்டுக்களினால் சூழப்பட்டுக் காணப்படுகின்றது. இத் தேசிய பூங்கா இலங்கையின் உலர் வலயத்தில் காணப்படுகின்றது. இதன் வருடாந்த வெப்பநிலை 27.0$^{o}$C (80.6$^{o}$F) ஆகும்.

வருடாந்த மழைவீழ்ச்சி 1,000–1,700 மில்லிமீற்றர்கள் (39–67 in) க்கு இடைப்பட்டதாகும். இது ஒக்டோபர் முதல் மார்ச் வரையிலான காலத்தில் அதிக மழையினைப் பெறுகின்றது. இப் புறாமலையை நிலாவெளி கடற்கரையில் இருந்து கடல் மார்க்கமாக சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் பார்க்க முடியும்.

படகு மூலமாக பணம் கொடுத்து இயற்கையின் அழகை ரசிக்கலாம். புறாமலையில் உள்ள கடல் நீரானது கண்ணாடி போன்று தெளிவாக காட்சியளிப்பதுடன் சுழியோடும் அளவுக்கு அங்கு பாதுகாப்பான ஏற்பாடுகளும் அமையப்பெற்றுள்ளன இது வனஜீவராசிகள் திணைக்களத்தின் பாதுகாப்புகள் உட்பட இலங்கை கடற்படையும் அங்கு இதனை பாதுகாத்து வருகிறது.

நாளாந்தம் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றமையும் வெளிநாட்டு உள்நாட்டுப் பயணிகள் வருகை தருகின்றனர். இதனால் படகு ஓட்டுனர்கள் உட்பட நாட்டுக்கு அந்நியச் செலாவாணி இதன் மூலமாக கிட்டுகின்றது.

புறா மலையில் உள்ள ஏதாவது பொருட்களையோ கடற்பாசி சிற்பிகளையோ கடல் தாவர இனங்களையோ தம்வசம் வைத்துக்கொள்ளவோ அங்கிருந்து கொண்டுவர முடியாது. தவறுகின்ற பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிப்புப் பலகையில் எழுதப்பட்டுள்ளமையும் சுற்றுலாப் பிரதேசமாக இது கணிக்கப்படுகிறது.தற்போதைய நிலாவெளி கடற்கரை தொடக்கம் புறாமலை வரையான கடல் பகுதிக்கு இடையில் நடைபெறும் திடீர் நீரில் மூழ்கும் நபர்கள் கரையோர பாதுகாப்பு பொலிஸாரினால் பாதுகாப்பு ஏற்பாடுகளும் உள்ளன.

இக்கரையோர பகுதியை அண்டிய இடங்களில் சொகுசான தங்குமிட ஹோட்டல் அறைகள் என பல இடங்கள் காணப்படுவதும் மேலும் சுற்றுலாப் பகுதியினருக்கு அழகு சேர்க்கிறது.



## உலக புவி தினம்

# இந்தப் பூமி நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறது?

சுற்றுச்சூழல் சவால்கள் குறித்த பொது விழிப்புணர்வை அதிகரிக்கவும், பூமியை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், உலகெங்கிலும் உள்ள மக்கள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 22 அன்று 'பூமி தினத்தை' கடைபிடிக்கிறார்கள். இந்த நிகழ்வு நமது பூமி எவ்வளவு அழகானது என்பதை நினைவூட்டுவதாகவும் உள்ளது.

பூமியின் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், புவி மாசடைவதைத் தடுக்கும் எண்ணத்துடனும், 1970-ம் ஆண்டு முதல், உலக நாடுகள் அனைத்திலும், ஏப்ரல் 22-ந் தேதியை 'உலக புவி தினம்' என்று கடைப்பிடித்து வருகிறோம்.

உலக உயிர்கள் வாழத் தகுதியான இடமாக இந்த பூமி மட்டுமே இருப்பதாக ஆய்வுகள் பதிவு செய்கின்றன. அத்தகைய அற்புதம் நிறைந்த இந்த பூமி, மனிதர்களின் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, காற்று மாசடைந்து, தன்னுடைய தனித்தன்மையை இழந்து கொண்டிருக்கிறது. இப்படியே போனால்,

**பூமியின் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், புவி மாசடைவதைத் தடுக்கும் எண்ணத்துடனும், 1970-ம் ஆண்டு முதல், உலக நாடுகள் அனைத்திலும், ஏப்ரல் 22ந் தேதியை 'உலக புவி தினம்' என்று கடைப்பிடித்து வருகிறோம்.**

இந்த பூமியில் உலக உயிர்கள் வாழ்வது என்பது கேள்விக்குறியாகிவிடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அதற்கு இன்னும் பல கோடி ஆண்டுகள் ஆகலாம் என்றாலும், அதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதும், அந்த

இக்கட்டான சூழலை நம்முடைய பிற்கால சந்ததியினர் சந்திக்க வேண்டியதிருக்கும் என்பதுமே இங்கிருக்கும் அபாயம்.

அந்த வகையில் பூமியின் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், புவி மாசடைவதைத் தடுக்கும் எண்ணத்துடனும், 1970-ம் ஆண்டு முதல், உலக நாடுகள் அனைத்திலும், ஏப்ரல் 22-ந் தேதியை 'உலக புவி தினம்' என்று கடைப்பிடித்து வருகிறோம். 1969-ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் யுனெஸ்கோ மாநாடு ஒன்று நிகழ்ந்தது. அந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார், ஜான் மெக்கானல். இவர் உலக அமைதியை



வலிறுத்தி குரல் கொடுத்து வந்தவர். அவர் அந்த கூட்டத்தில், 'மனிதர்களும், பிற உயிரினங்களும் வாழுகின்ற இந்த பூமியின் அழகை சிறப்பிக்கவும், பூமியின் இயற்கைச் சூழல் உருக்குலைந்து, மாசுபடாமல் பாதுகாக்கவும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம்' என்று பேசினார். அதோடு இதற்காக ஆண்டுதோறும் 'புவிநாள்' என்ற பெயரில் ஒரு தினத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அந்த நேரத்தில், ஐக்கிய அமெரிக்காவின் சுற்றுச்சூழலியல் நிபுணரும், மேலவை உறுப்பினருமாக இருந்த கேலார்ட் நெல்சன் என்பவர், சுற்றுச்சூழல் பற்றிய அறிவை உலக மக்களிடையே பரப்புவதற்கு, 1970-ம் ஆண்டு ஏப்ரல் 22-ந் தேதி அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். இந்த நாளில்தான், புவியின் வட கோளப் பகுதியான வசந்த காலத்தையும், தென்கோளப் பகுதி இலையுதிர் காலத்தையும் சந்திக்கிறது. அதை கருத்தில் கொண்டு, கோலர்ட் நெல்சனின் அழைப்பை ஏற்று, 2 கோடி பேர் அந்த நிகழ்வில் பங்கெடுத்தனர். அது முதல் ஆண்டு தோறும் ஏப்ரல் 22-ந் தேதியை புவி தினமாக கடைப்பிடித்து வருகிறோம். உலகம் முழுவதும் 175 நாடுகள் இந்த தினத்தை கடைப்பிடிக்கின்றன.

அதே நேரத்தில் அனைவருக்கும் மிகவும் சமமான எதிர்காலத்தை நோக்கி செயல்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்று பூமி தினத்தை ஒருங்கிணைக்கும் நிறுவனங்கள், கண்டுபிடிப்பாளர்கள், முதலீட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பசுமை கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க வேண்டும் என்றும் செயல்பட தொடங்கி இருக்கின்றனர்.

இதை தொடர்ந்து பூமியின் சுற்றுச்சூழலை காக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.. ஆனாலும் கூட காலநிலை மாற்றம் என்பது தற்போது மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறி வருகிறது. காலநிலை மாற்றத்தால் 2030 - 2050 ஆண்டு வரை சுமார் 2 லட்சம் பேர் உயிரிழக்கலாம் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. மறுபுறம், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் காலநிலை மாற்றம் மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர். 2100-ம் ஆண்டுக்குள், உலகில் காலநிலை பிரச்சனைகள் அதிகமாகும் என்றும், மேகவெடிப்பு, சுனாமி, பெருவெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்களால் பல நாடுகள் அழியக்கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த பூமி தினத்தில் பூமியை காக்க வேண்டும் அனைவரும் உறுதியேற்று, தங்களால் முடிந்த சிறிய மாற்றங்களை செயல்படுத்துவோம்.. மேலும் உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து பூமியின் சுற்றுச் சூழலை காக்க துரித நடவடிக் கைகளை எடுக்க வேண்டும் என்பதே சுற்றுசூழல் ஆர்வலர்களின் விருப்பமாக உள்ளது..



# எலோன் மஸ்க் மற்றும் டெஸ்லா: வாகனத் தொழிலில் புரட்சி!

(Elon Musk and Tesla: Revolutionizing the Automotive Industry)

## *Teslaவின் தடைகளைத் தாண்டி சவால்களை எதிர்கொண்டு வெற்றி*
## *A Lesson from the World's Biggest Giant: Tesla's Triumph Over Adversity*

Elon Reeve Musk, Tesla, Inc., SpaceX மற்றும் Twitte போன்றவற்றில் முக்கியப் பாத்திரங்களுக்கு பெயர் பெற்ற ஒரு தொழிலதிபர். 2025 முதல், அவர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மூத்த ஆலோசகராகவும், அரசாங்க செயல்திறன் துறையின் உண்மையான தலைவராகவும் இருந்து வருகின்றார்.

டெஸ்லாவின் தொலைநோக்கு தொழில் முனைவோரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலோன் மஸ்க், நிலையான ஆற்றல் மற்றும் மின்சார வாகனங்களை (EVs) நோக்கிய மாற்றத்தை முன்னெடுத்து வாகனத் துறையை மறுவரையறை செய்துள்ளார். அதன் தொடக்கத்தில் இருந்து, டெஸ்லா பாரம்பரிய கார் உற்பத்தியை மாற்றி அமைத்துள்ளது, EV கள் உயர் செயல்திறன் மற்றும் வணிக ரீதியாக சாத்தியமானதாக இருக்கும் என்பதை நிருபிக்கின்றது. நிறுவனத்தின் விரைவான கண்டுபிடிப்பு, தைரியமான தலைமை மற்றும் நிலைத்தன்மைக்கான அர்ப்பணிப்பு ஆகியவை உலகளாவிய வாகன சந்தையில் அதை ஒரு மேலாதிக்க சக்தியாக நிலைநிறுத்தியுள்ளன.

## டெஸ்லாவின் ஆதிக்க உயர்வு

2003 இல் நிறுவப்பட்ட டெஸ்லா, ஆரம்பத்தில் மின்சார ஸ்போர்ட்ஸ் கார்களில் கவனம் செலுத்தும் ஒரு முக்கிய தொடக்கமாக இருந்தது. இருப்பினும், மஸ்க்கின் தலைமையின் கீழ், நிறுவனம் EA களை பிரதான நீரோட்டமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு அதன் பார்வையை விரிவுபடுத்தியது. 2008 ஆம் ஆண்டில் டெஸ்லா ரோட்ஸ்டரின் அறிமுகம் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறித்தது, மின்சார கார்கள் ஸ்டைலானதாகவும் சக்திவாய்ந்ததாகவும் இருக்கும் என்பதை நிரூபித்தது. இதைத் தொடர்ந்து Model S, Model X, Model 3, மற்றும் Model Y, ஒவ்வொன்றும் வரம்பு, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத்தில் புதிய வரையறைகளை அமைத்தன. இன்று, டெஸ்லா உலகின் மிக மதிப்புமிக்க கார் தயாரிப்பாளராக நிற்கின்றது, சந்தை மூலதனத்தில் மரபு வாகன உற்பத்தியாளர்களை விஞ்சுகின்றது.

## தொழில்நுட்ப புரட்சிகள் மற்றும் புதுமை

டெஸ்லா ஒரு கார் உற்பத்தியாளர் மட்டுமல்ல; இது ஒரு தொழில்நுட்ப நிறுவனமாகும், இது

செயற்கை நுண்ணறிவு, பேட்டரி தொழில்நுட்பம் மற்றும் தன்னியக்க ஓட்டுநர் அமைப்புகளை அதன் தயாரிப்புகளில் ஒருங்கிணைக்கின்றது. நிறுவனத்தின் ஆட்டோபைலட் மற்றும் முழு சுய-ஓட்டுதல் (FSD) திறன்கள் தன்னாட்சி வாகன வளர்ச்சியில் முன்னணியில் அதை நிலைநிறுத்தியுள்ளன. கூடுதலாக, டெஸ்லாவின் மேம்பட்ட பேட்டரி தொழில்நுட்பம் FV வரம்பையும் செயல்திறனையும் கணிசமாக மேம்படுத்தி, நிலையான போக்குவரத்தை அணுகக்கூடியதாக ஆக்கியுள்ளது.

உலகெங்கிலும் உள்ள மிகப்பெரிய உற்பத்தி வசதிகளான ஜிகாஃபாக்டரிஸ் டெஸ்லாவின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்துள்ளது. பேட்டரி உற்பத்தி மற்றும் விநியோகச் சங்கிலி நிர்வாகத்தை செங்குத்தாக ஒருங்கிணைப்பதன் மூலம் டெஸ்லா



அளவிலான பொருளாதாரத்தை அடைந்துள்ளது, உற்பத்தி செலவுகளை குறைத்து உற்பத்தியை அதிகரிக்கின்றது

டெஸ்லா வீழ்ச்சியின் விளிம்பில் இருந்து உலகின் மிகவும் மதிப்புமிக்க வாகன உற்பத்தியாளராக மாறியது, பின்னடைவு, பார்வை மற்றும் புதுமை ஆகியவற்றில் ஒரு தலைசிறந்த சரித்திரமாகும். 2018 ஆம் ஆண்டில், டெஸ்லா வங்குரோத்து நிலையின் விளிம்பில் இருந்தது, மேலும் தொழில்துறை ஜாம்பவான்கள் அதன் மீள் எழுச்சி பெற்று வருவதற்கான வாய்ப்புகளை விரைவாக நிராகரித்தனர்.

- **Mercedes மெர்சிடிஸ் கணித்தது:** 'Tesla கோடையில் திவாலாகிவிடும்.'
- (Wall Street analysts) **கூறியது:** 'Tesla ஒருபோதும் வெகுஜன உற்பத்தி செய்ய மாட்டார்கள்.'
- (Wall Street analysts) வோல் ஸ்ட்ரீட் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தினர்: 'உற்பத்தி கனவு.'

எலான் மஸ்க், வேறு திட்டம் வைத்திருந்தார். அழுத்தத்திற்கு அடிபணிவதை விட, எலோன் மஸ்க் வேறு பாதையைத் தேர்ந்தெடுத்தார். இடைவிடாத உறுதியுடன் அவர் டெஸ்லா தொழிற்சாலைக்குள் நுழைந்தார், சவாலை நேருக்கு நேர் சமாளிக்கத் தயாராக இருந்தார்.

## திருப்புமுனை: முன்னணியில் இருந்து வழிநடத்திய ஒரு தலைவர்

அதைத் தொடர்ந்து உலகையே வியப்பில் ஆழ்த்தியது. டெஸ்லாவின் செயல்பாடுகளின் ஒவ்வொரு அம்சத்திலும் மஸ்க் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தனது பார்வையை நிஜமாக்குவதில் ஈடு இணையற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார். அவரது தலைமைத்துவபாணி ஏனையோரிடம் நேரடியாகவும் தொடர்ச்சியாகவும் கைகோர்த்து வியக்கம் வண்ணம் செயல்பட்டார். குறிப்பாக பின்வருவனவற்றை சுட்டிக்காட்டலாம்.

- ஒவ்வொரு உற்பத்தி நிலையத்தையும் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்தார்.
- தேவைப்படும் போது மென்பொருள் குறியீட்டை மீண்டும் உருவாக்கினார்.
- அவரது பார்வைக்கு ஒத்துப்போகாத மேலாளர்களை பணி நீக்கினார்.
- முக்கியமான பாகங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, அதிகாலை 3 மணிக்கு வழங்குனர்களுக்கு அழைப்பு விடுத்தார்.
- பொறியாளர்களுடன் இணைந்து பணிபுரிந் தார், குறிப்பாக Model 3 ஐ உற்பத்தி செய்து சரிசெய்யும்போது அவரும் ஏனைய தொழிலாளர்களிடம் சேர்ந்து எண்ணெயில் வேலை செய்தார்.
- அவரது அணிக்கு ஒரு இறுதி எச்சரிக்கையை வழங்கினார்: 'ஒன்று நாங்கள் அதை சரி செய்வோம் அல்லது இறந்துவிடுவோம்.'- "Either we fix it or we die."

இந்த அளவிலான அர்ப்பணிப்பு மற்றும் விவரங்களுக்கு கவனம் செலுத்துவது ஒரு சக்திவாய்ந்த செய்தியை டெஸ்லா ஊழியர்களுக்கு மட்டுமல்லஇ ஒட்டுமொத்த தொழில்துறைக்கும் வழங்கியது.

## நெருக்கடியிலிருந்து திருப்புமுனை வரை: புள்ளி விபரங்கள் பேசுகின்றன.

## *From Crisis to Breakthrough: The Numbers Speak*

டெஸ்லாவின் ஆரம்ப உற்பத்தி சவால்கள் அச்சுறுத்தலாக இருந்தனஇ ஆனால் எலோன் மஸ்க்கின் தீவிரமான தலைமையின் கீழ், நிறுவனம் அவற்றை முறியடித்தது:

- முதல் வாரம்: வெறும் 202 Model 3 கள் தயாரிக்கப்பட்டது.
- மூன்றாவது மாதம்: வாரத்திற்கு 5,000 மாடல் 3 களை எட்டியது
- ஆண்டின் முடிவு: டெஸ்லா அதன் முதல் இலாபகரமான காலாண்டைப் பதிவு செய்தது.

இந்த திருப்புமுனை வெறும் எண்களைப் பற்றியது அல்ல - இது உணர்வின் மாற்றமாகும். ஒரு காலத்தில் டெஸ்லாவைப் பார்த்து சிரித்த வாகனத் துறை, அதை அச்சத்துடன் ஆச்சரியத்துடனும் எடுத்துக்கொள்ளத் தொடங்கியது.

## பல நூற்றாண்டுகள் பழமையான தொழில் வல்லுனர்களிடையே ஒரு சீர்குலைப்பவர்

பாரம்பரிய வாகன உற்பத்தியாளர்களின் பின்னணியில் பார்க்கும்போது டெஸ்லாவின் வெற்றி இன்னும் குறிப்பிடத்தக்கது. டொயோட்டா, GM, Ford மற்றும் BMW போன்ற நிறுவனங்கள்:

- 100 ஆண்டுகளுக்கும் மேலான தொழில் அனுபவம்
- கோடிக்கணக்கான பண கையிருப்பு
- விரிவான உலகளாவிய விநியோகச் சங்கிலிகள்
- ஆழமான அரசியல் செல்வாக்கு

ஆயினும்கூட, இந்த நன்மைகள் இருந்த போதிலும், டெஸ்லா மேலாதிக்க சக்தியாக வெளிப்பட்டது. இன்று டெஸ்லா, Toyota, GM, Ford மற்றும் BMW ஆகியவற்றைக் காட்டிலும் அதிக மதிப்புடையது - விடாமுயற்சி மற்றும் அதி நவீன கண்டுபிடிப்புகளின் சக்திக்கு ஒரு சான்றாகும்.

## வணிகங்கள் மற்றும் தொழில்முனை வோருக்கான பாடங்கள்

டெஸ்லாவின் பயணம் வணிகங்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு பல முக்கிய படங்களை வழங்குகின்றது:


1. **இடைவிடாத தலைமை:** பிரச்சனைகளைத் தீர்ப்பதில் தனிப்பட்ட முறையில் ஈடுபடும் எலோன் மஸ்கின் விருப்பம் முழு நிறுவனத்திற்கும் தொனியை அமைக்கின்றது.
2. **தைரியமான பார்வை:** விமர்சகர்கள் குறுகிய கால போராட்டங்களில் கவனம் செலுத்துகையில்இ எலோன் மஸ்க் வாகனத் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் டெஸ்லாவின் நீண்ட கால இலக்கில் உறுதியாக இருந்தார்.
3. **சுறுசுறுப்பு மற்றும் தழுவல்:** நிறுவனம் உற்பத்தி சவால்களை சமாளிக்க விரைவான மாற்றங்களைச் செய்தது, நெகிழ்வுத்தன்மையின் முக்கியத்துவத்தை நிரூபிக்கின்றது.
4. **புதுமைகளின் கலாச்சாரம்:** டெஸ்லாவின் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப சிறப்பிற்கு முக்கியத்துவம் அளித்ததுஇ அது நன்கு நிறுவப்பட்ட போட்டியாளர்களை விட சிறப்பாக செயல்பட அனுமதித்தது.
5. **ரிஸ்க்-டேக்கிங் / இடர் எடுக்கும் தன்மை:** டெஸ்லாவின் வெற்றியில் எலோன் மஸ்க் எல்லாவற்றையும் பந்தயம் கட்டினார், இது இறுதியில் பலனளித்தது.

## விடாமுயற்சி மற்றும் பார்வையின் சக்தி

டெஸ்லாவுடனான எலோன் மஸ்க்கின் கதைஇ துணிச்சல்இ உறுதிப்பாடு மற்றும் துணிச்சலான யோசனையில் அசைக்க முடியாத நம்பிக்கை ஆகியவற்றைக் கொண்டது. தோல்வியின் விளிம்பில் இருந்து மிகவும் மதிப்புமிக்க வாகன உற்பத்தியாளராக மாறுவது வரைஇ டெஸ்லாவின் பயணம்இ தற்போதைய நிலையை சவால் செய்யத் துணிந்தவர்களால் சிறந்த நிறுவனங்கள் கட்டமைக்கப்படுகின்றன என்பதை நினைவூட்டுகின்றது.

மஸ்க்கின் சொந்த வார்த்தைகளில்: 'இது மிகவும் வேதனையான நேரம். எனக்குத் தெரியாது, ஆனால் நான் கொஞ்சம் பைத்தியமாக இருந்தேன்.' உலகை மாற்றுவதற்கு ஒரு சிறிய பைத்தியம் சரியாகத் தேவைப்படலாம்.

டெஸ்லாவின் எழுச்சி எல்லா இடங்களிலும் உள்ள வணிகங்கள், தலைவர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு ஒரு உத்வேகமாக செயல்படுகின்றது: பெரும் முரண்பாடுகளை எதிர்கொள்ளும் போது, விடாமுயற்சி மற்றும் பார்வை எதிர்பார்ப்புகளை மீறி, முழுத் தொழில்களையும் மறுவடிவமைக்கும்.



**டெஸ்லாவின் மாற்றத்திலிருந்து தற்போதுள்ள வணிக முயற்சிகள் கற்றுக்கொள்ளக்கூடிய சில முக்கிய பாடங்கள் இங்கே:**

1. **தலைமைத்துவம் வெற்றியைத் தூண்டுகின்றது**
   - தலைவர்கள் தங்கள் வணிக நடவடிக்கைகளில் தங்களை முழுமையாக அர்ப்பணிக்க தயாராக இருக்க வேண்டும்.
   - தலைமை நிர்வாக அதிகாரியின் நேரடி ஈடுபாடு ஊழியர்களை ஊக்குவிக்கும் மற்றும் அர்ப்பணிப்பை ஊக்குவிக்கும்.
2. **தகவலமைப்பு என்பது நிலைத்திருப்பதற்கான திறவுகோல்**
   - டெஸ்லா ஒரு 'தயாரிப்பு கனவை' எதிர்கொண்டது, ஆனால் அதன் உத்திகளை விரைவாக சரிசெய்தார்கள்.
   - எதிர்பாராத சவால்களை எதிர்கொள்ள வணிகங்கள் நெகிழ்வாக இருக்க வேண்டும்.
3. **சந்தேகத்தை விட நேர்கொண்ட பார்வை சக்தி வாய்ந்தது**
   - பலர் டெஸ்லாவை சந்தேகித்தனர், ஆனால் எலோன் மஸ்க்கின் அசைக்க முடியாத நேர்கொண்ட பார்வை நிறுவனத்தை பாதையில் வைத்திருந்தது.
   - தொழில்முனைவோர் வெளிப்புற விமர்சனங்கள் இருந்தபோதிலும் நீண்ட கால இலக்குகளில் கவனம் செலுத்த வேண்டும்.
4. **புதுமை மற்றும் இடர் எடுப்பது போட்டியின் உச்சத்தை கொண்டுவருகின்றது**
   - பாரம்பரிய வாகன உற்பத்தியாளர்கள் நிறுவப்பட்ட முறைகளை நம்பியிருந்தனர், ஆனால் டெஸ்லா தொழில்துறையை மாற்றி அமைத்தது.
   - வணிகங்கள் தொடர்ந்து புதுமைகளை உருவாக்க வேண்டும் மற்றும் முன்னேறுவதற்கு கணக்கிடப்பட்ட தீர்மானங்களையும் முடிவுகளையும் எடுக்க வேண்டும்.

### 5. *Speed and Execution Matter* / வேகம் மற்றும் செயல்படுத்தல் விஷயம்

- Tesla ஒரு வாரத்திற்கு 202 கார்களின் உற்பத்தியை சில மாதங்களில் 5,000 ஆக உயர்த்தியது.
- வணிக வளர்ச்சிக்கு விரைவான செயல் மற்றும் சிக்கலைத் தீர்ப்பது அவசியம்.

6. **வலுவான பணி நெறிமுறை தொனியை**
   - எலோன் மஸ்க் பொறியாளர்களுடன் இணைந்து பணியாற்றினார், வெற்றிக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்.
   - வணிகத் தலைவர்கள் தங்கள் நிறுவனத்தின் சவால்களில் தீவிரமாக பங்கேற்பதன் மூலம் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.
7. **வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட கவனம் அவசியம்**
   - Tesla தரம் மற்றும் புதுமைகளுக்கு முன்னுரிமை அளித்து வலுவான வாடிக்கை யாளர் தளத்தை உருவாக்கியது.
   - நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர்களைக் கேட்டு அதற்கேற்ப தயாரிப்புகளைச் செம் மைப்படுத்த வேண்டும்.

இந்தக் கொள்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம், வணிக முயற்சிகள் துன்பங்களையும் தோல்விகளையும் வாய்ப்பாக மாற்றி நீண்ட கால வெற்றிக்கு தங்களை நிலைநிறுத்திக் கொள்ளலாம்.

## சவால்கள் மற்றும் விமர்சனம்

டெஸ்லா அதன் வெற்றியின் போதிலும், உற்பத்தி தாமதங்கள், ஒழுங்குமுறை ஆய்வு மற்றும் எலோன் மஸ்கின் தலைமைத்துவ பாணியைச் சுற்றியுள்ள சர்ச்சைகள் உட்பட பல சவால்களை எதிர்கொண்டது. நிறுவனம் அதன் உயர் பங்கு மதிப்பீடு, தொழிலாளர் நடைமுறைகள் மற்றும் அதன் தன்னாட்சி ஓட்டுநர் அம்சங்களுடன் தொடர்புடைய பாதுகாப்பு கவலைகள் ஆகியவற்றிற்காகவும் விமர்சிக்கப்பட்டது. ஆயினும்கூட, டெஸ்லா தனது ஆக்கிரமிப்பு வளர்ச்சி மூலோபாயத்தை பராமரிக்கும் அதே வேளையில் சிக்கல்களைத் தீர்க்க தொடர்ந்து முன்னேறி வருகின்றது.

## வாகனத் தொழிலில் டெஸ்லாவின் தாக்கம்

டெஸ்லாவின் செல்வாக்கு அதன் சொந்த வெற்றிக்கு அப்பாற்பட்டது. Ford, GM மற்றும் Volkswagen போன்ற தொழில்துறை ஜாம்பவான் கள் மின்சார இயக்கத்தில் அதிக முதலீடு செய்வதன் மூலம் பாரம்பரிய வாகன உற்பத்தியாளர்களை தங்கள் FV உத்திகளை விரைவுபடுத்துமாறு நிறுவனம் கட்டாயப்படுத்தியுள்ளது. டெஸ்லாவின் சந்தைத் தலைமையால் ஓரளவு இயக்கப்படும் FV தத்தெடுப்பை ஊக்குவிக்க உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்களும் ஊக்கத்தொகைகள் மற்றும் விதிமுறைகளை அதிகரித்துள்ளன.

## டெஸ்லாவின் எதிர்காலம்

உலகின் மிகப்பெரிய மின்சார வாகன (FV) உற்பத்தியாளரான டெஸ்லா (Tesla) இந்தியாவில் தனது முதல் ஷோரூமை மும்பையில் திறக்க உள்ளது. இது மும்பையில் உள்ள பாந்த்ரா குர்லா வளாகத்தில் (BKC) நடைபெறும். இதற்கான ஒப்பந்தத்தை நிறுவனம் சமீபத்தில் இறுதி செய்துள்ளது. தகவல்களின்படி, டெஸ்லா பி.கே.சியில் உள்ள ஒரு வணிக கோபுரத்தின் தரை தளத்தில் 4,000 சதுர அடி இடத்தை எடுத்துக்கொண்டுள்ளது. இங்கே டெஸ்லா அதன் கார் மாடல்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்யவுள்ளது. நிறுவனம் தனது கடையை டெல்லி மற்றும் மும்பையில் திறக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி, டெல்லியின் ஏரோசிட்டி வளாகத்தில் டெஸ்லா அதன் இரண்டாவது ஷோரூமை திறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மும்பையின் பி.கே. சி.யில் ஒரு ஷோரூம் திறந்து, இந்தியாவில் பணியிடங்களை நிரப்பிய பிறகு, டெஸ்லா ஏப்ரல் மாதத்திற்குள் இந்தியாவில் கார்களை விற்பனை செய்யத் தொடங்கும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. டெஸ்லா தற்போது இந்தியாவில் ஒரு உற்பத்தி ஆலையை அமைக்காது. ஜேர்மனியின் பெர்லின்-பிராண்டன்பர்க்கில் உள்ள பிரம்மாண்ட தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட கார்களை இந்தியாவுக்கு கொண்டு வருகின்றது.

முன்னோக்கிப் பார்க்கையில், Cybertruck, செமி மற்றும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மலிவு விலையில் உழுஅpயஉவ FV போன்ற திட்டங்களுடன் டெஸ்லா தனது தயாரிப்பு வரிசையை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நிறுவனம், சூரிய சக்தி மற்றும் ஆற்றல் சேமிப்பு உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தீர்வுகளிலும் முதலீடு செய்து, அதன் நிலைத்தன்மையின் பரந்த பார்வையுடன் இணைந்துள்ளது.

புதுமைக்கான எலோன் மஸ்க்கின் தைரியமான அணுகுமுறை மற்றும் நிலைத்தன்மையில் இடைவிடாத கவனம் செலுத்துவதன் மூலம், டெஸ்லா FV புரட்சியின் முன்னணியில் உள்ளது. புதுமையான தொழில்நுட்பம், சந்தை சீர்குலைவு அல்லது இலட்சிய எதிர்கால திட்டங்கள் மூலம், டெஸ்லா போக்குவரத்து மற்றும் ஆற்றலின் எதிர்காலத்தை தொடர்ந்து வடிவமைக்கின்றது.

எலோன் மஸ்க் மற்றும் டெஸ்லா வாகனத் துறையில் என்ன சாத்தியம் என்பதை மறுவரையறை செய்துஇ மின்சார இயக்கம் சாத்தியமானது மட்டுமல்லஇ எதிர்காலமும் கூட என்பதை நிரூபித்துள்ளனர். நிறுவனம் தொடர்ந்து புதுமை மற்றும் விரிவாக்கம் செய்து வருவதால்இ நிலையான ஆற்றல் மற்றும் போக்குவரத்தை நோக்கிய உலகளாவிய மாற்றத்தில் இது ஒரு முக்கிய பங்கை வகிக்க உள்ளது.



ஸ்ரீ AGS. சுவாமிநாதன் சர்மா
MBA (UK), FCA (SL), FCMA (UK), FCPA (Aust.)

# பார்வை

வேலிகள் காணிகளின் பெரும் சொத்து. வேலிக்காக இயற்றப்பட்ட ஏராளமான சட்டங்கள் உண்டு. எல்லை வேலிகளுக்காக நடந்த பிரபல வழக்குகள் அதிகம். அவை முற்தீர்ப்புக் கொள்கைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. எல்லை வேலியை வைத்து இருதரப்புக்கு மோதல்கள் ஏற்பட்டால், அந்த வேலியை எப்படி பகிர வேண்டும் என்பது முதல்இ அதை அடைப்பதற்குhன தடிகள் கம்புகள் கிடுகுகள் தகரங்கள் போன்றவற்றை எதிர்தரப்பு காணியில் போட்டு வைத்து வேலி அடைக்க உரிமையுண்டு. அடுத்த காணியில் அந்த உரிமையை வரம்புமீறாமல் எடுத்துக் கொள்ளலாம்



வேலிகள் காணிகளின் பெரும் சொத்து. வேலிக்காக இயற்றப்பட்ட ஏராளமான சட்டங்கள் உண்டு. எல்லை வேலிகளுக்காக நடந்த பிரபல வழக்குகள் அதிகம். அவை முற்தீர்ப்புக் கொள்கைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. எல்லை வேலியை வைத்து இருதரப்புக்கு மோதல்கள் ஏற்பட்டால், அந்த வேலியை எப்படி பகிர வேண்டும் என்பது முதல், அதை அடைப்பதற்கhன தடிகள் கம்புகள் கிடுகுகள் தகரங்கள் போன்றவற்றை எதிர்தரப்பு காணியில் போட்டு வைத்து வேலி அடைக்க உரிமையுண்டு. அடுத்த காணியில் அந்த உரிமையை வரம்புமீறாமல் எடுத்துக் கொள்ளலாம்

பரமசிவம் காணியை வெட்டின நேரம், பக்கத்தில் காடுதான். அவனுடைய காணிதான் எல்லையாக இருந்தது. ஒரு ஆறேழு வருசம் கழிச்சு பக்கத்தில இருந்த காடுகளும் காணிக்கச்சேரி வைத்து அரசாங்கத்தால பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இப்ப பரமசிவம் தன்ர காணிக்கு நாலு பக்க வேலிக்கயும் பனங்கொட்டையளப் போட்டு அதுகும் வடலியாக வந்திருந்தது. முன்பக்கம் ஒழுங்கை.

.

பின்னால் காணிகள் கொடுத்த பிறகு. ஆந்த ஒழுங்கைய அகலப்படுத்தி கல்லுப் (எல்லைக்கல்) போட்டிட்டாங்கள். அதனால் முன்பக்க பனை வடலிகள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டது. தோட்டநிலம் கத்தரி, மிளகாய், பூசணி, பாகல் எண்றும்; கச்சான், பயறு, உழுந்து என்றும்; எப்பவும் பயிரோடு இருக்கும் நிலம். பரமசிவமும் மனிசியும் நல்ல பிரையாசைக்காறர். பிள்ளையளும் பொறுப்பான பிள்ளையள்தான். அந்தக்காலம் என்ன, டியூசன் வகுப்புகள் இல்லைத்தானே அதுகளும் பள்ளிக்கூடத்தால வந்து தோட்டத்தில் வேலையிருந்தா செய்யுங்கள்.

காலம் போய்க்கொண்டிருந்தது. பின்னால காணி எடுத்த விசுவலிங்கம், பக்கத்தில காணி கிடைச்சு வந்த தாமோதரம்பிள்ளை ரெண்டு பேருக்கும் ஒவ்வொரு பக்க எல்லை பரமசிவந்தான்.

அவன் வேலிக்க எட்டடிக்கொண்டா போட்ட பனங் கொட்டையள் இப்ப பனை மரமா வளந்திட்டுது. பனையப்பற்றித்தான் தெரியுமே. அது நட்டாயிரம் ஆண்டு பட்டாயிரம் ஆண்டு வைரமா இருக்குமெண்டு சொல்லுவினம். ஒவ்வொரு வேலியிலும் முப்பது பனைக்கு குறையாம இருக்கு. அதோட முருங்கை, குறிஞ்சா, வாதநாராயணி, நொச்சி என்று ஏகப்பட்ட மூலிகையளும் வேலி நிறைய இருக்கு. முருங்கைமரத்தைப்பற்றி சொல்லியே ஆகவேணும். சிவபெருமான்ர தலையில உள்ள சடைமுடி போல மரம் முழுக்க சடைச்சுக்காய்க்கும். வேலிக்கு அந்தப்பக்கமா உள்ள காயள்ள விசுவலிங்கத்தின்ர மனிசியும் கறி வைக்கிறதுதான். தாமோதரம் பிள்ளையற்ற மனிசியும் கறி வைக்கிறதுதான். அதே போல குறிஞ்சாஇ கொவ்வை தூதுவளை எல்லாம் எட்டி ஒரு வார்த்தை சொல்லீற்று ஆயுறதுதான்.

ஆனா... விசுவலிங்கத்துக்கு வீடுகட்டிற நோக்கம் வந்தபோது எல்லையில நிக்கிற பனையில ரெண்டை கிழிச்சுப் போடுற திட்டம் அதாவது ஆசை வந்திட்டுது. ஏற்கெனவே அவர்களுக்கிருந்த ஏனைய எல்லைகளை மதிலாக்கி விட்டிருந்தார். இந்தப்பக்க வேலி பரமசிவத்தினுடையது அதோடு பனை பெரிய அரணாக நின்றது. அதில் முப்பத்தினான்கு பனை நின்றது பதினேழு பனை தனக்குரியது என்றார் விசுவலிங்கம் கோடாலியோட வேலிக்க வந்த வேலையாட்களை கல்லெறிஞ்சு கலைச்ச பரமசிவத்தார் விதானையிடம் ஒரு முறைப்பாடு கொடுத்தார்.

பனை நின்ற வேலி அவனுடையதுதான். அத்தோடு பனையும் அவர் நட்டு உருவாக்கியதுதான். இப்போது காணி கிடைத்தும் நீங்கள் உங்களுடைய வேலியில் எதையாவது உருவாக்கி வைத்திருக்கிறீர்களா? இல்லையே அடுத்தவனுடைய சொத்துக்கு ஆசைப்படலாமா? முடிந்தால் அவரிடம் மரத்துக்கான பணத்தை செலுத்தி வாங்கிக் கொள்ளலாம் என்றார் விதானையார். அவருக்கும் ஒரு கட்டு முருங்கைக்காயை அன்பாக கொடுத்தார்கள். அது யாழ்ப்பாண முருங்கைக்காய் இனம். வன்னியிலும் ஏனைய இடங்களிலும் எவ்வளவு முருங்கைக்காய் காய்த்தாலும்இ யாழ்ப்பாண முருங்கைக்கு தனி மதிப்புத்தான் கறி கொதிக்கிற மணம் அயல் வீட்டாரையும் அசைத்துவிடும். ‘என்னக்கா முருங்கைக்காய் கறியே வாசம் தூக்குது’ என்பார்கள்.

முருங்கைக்காய் பால்க்கறி, முருங்கைக்காய் குழம்பு தனியாகவும் கருவாடு போட்டும் வைக்கலாம். முருங்கைக்காயை பொரித்து கறிவைக்கலாம், முருங்கைக்காயில் சதையை கரண்டியால் வகிர்ந்து சுண்டல் செய்யலாம். புறன்ன சீசன்காலத்தில்

முருங்கைக்காயை சந்தையில் விற்க முடியாது. அறாவிலை கேட்பார்கள்.

ஏற்றுமதி கிடையாது. எனவே அவற்றை அயலவர்களுக்கும் கொடுத்து சாப்பிட்டு முடிக்க வேண்டும். அப்படியும் காய்கள் முற்றி மரத்தில் தொங்கும். அதன்விதைகளை நீரில் போட்டால் நீரைச் சுத்தப்படுத்துமாம், முருங்கைக்கொட்டையில் எண்ணை தயாரிப்பதாகவும் பூங்கனியியல் விஞ்ஞானி ஆசி கந்தராஜா ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். இந்த முருங்கையை வளர்க்க நமது ஊரில் எந்தபெரிய முயற்சியும் தேவையில்லை. வெறுமனே வேலிக்குள் அதன்



கதிகால்களை நட்டுவைத்தால் போதும் தளிர்த்து தாய்மரம் காய்க்க நட்ட கிளையும் காய்க்கும் கால அவகாசமும் எடுத்துக் கொள்ளாது. இப்படி வேலியில் நட்ட மூலிகைகள் கோடைகாலத்தில் காணாமல் போய்விடும். அடடா அதில் நின்ற தூதுவளையை காணோமேஇ அதிலே நின்ற முடக்கத்தான் அழிந்து போச்சே என நான் கவலைப்படுவேன். பார்த்தால் மழை பெய்து புற்கள் முளைக்கும் போது இந்த மூலிகைகளும் கம்பீரமாக மேலே வரும்.

வேலிகள் காணிகளின் பெரும் சொத்து. வேலிக்காக இயற்றப்பட்ட ஏராளமான சட்டங்கள் உண்டு. எல்லை வேலிகளுக்காக நடந்த பிரபல வழக்குகள் அதிகம். அவை முற்தீர்ப்புக் கொள்கைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. எல்லை வேலியை வைத்து இருதரப்புக்கு மோதல்கள் ஏற்பட்டால்இ அந்த வேலியை எப்படி பகிர வேண்டும் என்பது முதல்இ அதை அடைப்பதற்குhன தடிகள் கம்புகள் கிடுகுகள் தகரங்கள் போன்றவற்றை எதிர்தரப்பு காணியில் போட்டு வைத்து வேலி அடைக்க உரிமையுண்டு. அடுத்த காணியில் அந்த உரிமையை வரம்புமீறாமல் எடுத்துக் கொள்ளலாம். இற்றைக்கு ஏறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டு காலமாக இன்னமும் வழமையிலுள்ள தேசவழமை சட்டத்தின் பல சரத்துகள் காலத்துக்கு ஒவ்வாததாக மாறியிருக்கின்றன.

பென்னம்பெரியகாணிகள்பிள்களுக்குபகிர்ந்து சின்னஞ்சிறிய காணிகளாக மாறினாலும், பென்னம்பெரிய நீதிமன்றங்களில் பென்னம்பெரிய கோப்புகளாக தூங்கிக் கிடக்கின்றன. இந்த வேலிகளும் நடை பாதைகளும் கிணறுகளும் கிணற்றின் பங்குகளும். புல சட்டத்தரணிகளின் வாழ்வாதாரமாக இந்த வழக்குகள் தொடர்கின்றன. புதிதாக பத்துக்கிணறு வெட்டக்கூடிய வல்லமை உள்ளவரும் தனது பூர்வீக கிணற்றிலிருந்து குழாய் போட்டாவது தனது பங்கு நீரை கொண்டு வருவதை பெருமையாக நினைக்கிறான்.

இதே பூர்வீக மண்ணை அதன் வளத்தை, அதன் பாரம்பரிய குணத்தை உடைத்தெறிந்து உரிமையை நிலைநாட்ட அழியாத சுவராக மதில்களைக்கட்டி மானபங்கப்படுத்துவதை என்னென்பது மதிலும் ஒருநாள் தகரும். உய்கதிகால்கள் மரமாகி காப்பாற்றிய எல்லைகளின் வரலாறு, ஆட்சியுரிமையின் சான்றுகள் மறக்கக்கூடியதல்ல.



தமிழ்க் கவி
சாகித்திய எழுத்தாளர்



# பனை எங்கள் முதுசம்.....

ஆதிகாலத்தில் பனையின் பயனை உணர்ந்த மன்னர்களும் மக்களும் ஈகையின் இருப்பிடமான இது உயர்ந்து வளர்ந்து ஊர்களைக் காத்திடும் என்று நம்பினர். இப்பனைதனை கடவுளை மதிப்பதுபோல் மதித்து பேணிப்பாதுகாத்ததாக நாம் அறிகின்றோம்.

## தமிழர் வாழ்வில் பனை

பனையின் உறுதித் தன்மையை கருத்திற்கொண்டு திருமணத்திற்குத் தெரிந்தெடுக்கும் தலைவன் பனையினை ஒத்தவனாகக் கருதப்பெற்றான். அவன் பனையைப் போல நீண்ட ஆயுளுடனும் உறுதியுடனும் பிறருக்கு இடையூறு செய்யாமல் வாழ வேண்டும் என்று பெரியோர் கூறுவர். அத்துடன் பிறருதவியின்றி தன் முயற்சியால் வாழ்வதோடு பிறரை பெருந்தன்மையாக உபசரிப்பவனை பனைக்கு நிகரானவன் எனக்கருதினர்.

எனவேதான் அன்று பனையின் ஓலையினை மணப்பெண்ணிற்கு தாலியாக்கிக் கழுத்தில் கட்டி என்றென்றும் தழைத்து வாழ்வாயாக என வாழ்த்தினர். தாலியே கணவன். கணவன் இல்லையேல் தாலியை அணிய மாட்டாள். இக்காலத்தில் தாலியும் அதன் கொடியும் பொன்னால் செய்யப்பட்டு வருகிறது. அப்படியிருந்தும் தாலியில் பனை, சூலம், அம்மன் முதலிய குறிகள் இடப்படும் வழக்கம் தற்போதும் நிலவி வருவதை காணலாம்.

## பனையின் தொன்மை

தேம்படு பனையின் திரள் பழத்தொரு விதை என பனம் பழத்தை ஒளவையார் வர்ணித்துள்ளார். கம்பராமாயணத்தின் பால காண்டப்பகுதியில் பனை உற்பத்தியின் பெருமை பற்றி பாடப்படுகிறது. அத்துடன் இராமருடைய கலியாண விருந்திற்கு வரும் வழியில் அரசர்களும் அரசிகளும் தாம் வைத்திருந்த வெள்ளிக் கிண்ணங்களில் மாலைப்பதநீர் வாங்கி சாப்பிட்டு மகிழ்ந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது.

வள்ளுவர் அறத்துப்பாலில் செய்நன்றி அறிதல் என்னும் அதிகாரத்திலும், பொருட்பாலில் குற்றங்கடிதல் அதிகாரத்திலும், காமத்துப்பாலில் புணர்ச்சி விரும்பல் என்னும் அதிகாரத்திலும் பனையை பண்பட்ட உள்ளத்திற்கு உவமானமாகக் கொண்டுள்ளார். சான்றோர்க்கும் பயிலன் 97வது செய்யுளில் பதநீர் இறக்கும் செயலைப் பாண்டிய மன்னர்கள் கும்மிப்பாட்டாகப் பாடிக்களித்துள்ளனர். திருமுறையாசிரியர் திருமூலர் பத்தாம் திருமுறையில் பனையின் பெருமையைப் பாடியுள்ளார். இத் திருக்குறள்களுக்கு கபிலர் கருத்துத் தெரிவிக்கையில் சிறிய நீர்த்துளியிலே பெரிய பனையின் பிரதி பிம்பம் அடக்குவதாக தோன்றுவதுபோல என்று கூறியுள்ளார்.

ஆதிகாலத்தில் பனையின் பயனை உணர்ந்த மன்னர்களும் மக்களும் ஈகையின் இருப்பிடமான இது உயர்ந்து வளர்ந்து ஊர்களைக் காத்திடும் என்று நம்பினர். இப்பனைதனை கடவுளை மதிப்பதுபோல் மதித்து பேணிப்பாதுகாத்ததாக நாம் அறிகின்றோம்.

## தமிழர் வாழ்வில் பனை

பனையின் உறுதித் தன்மையை கருத்திற் கொண்டு திருமணத்திற்குத் தெரிந்தெடுக்கும் தலைவன் பனையினை ஒத்தவனாகக் கருதப்பெற்றான். அவன் பனையைப் போல நீண்ட ஆயுளுடனும் உறுதியுடனும் பிறருக்கு இடையூறு செய்யாமல் வாழ வேண்டும் என்று பெரியோர் கூறுவர். அத்துடன் பிறருதவியின்றி தன் முயற்சியால் வாழ்வதோடு பிறரை பெருந்தன்மையாக உபசரிப்பவனை பனைக்கு நிகரானவன் எனக்கருதினர்.

எனவேதான் அன்று பனையின் ஓலையினை மணப்பெண்ணிற்கு தாலியாக்கிக் கழுத்தில் கட்டி என்றென்றும்தழைத்துவாழ்வாயாகஎனவாழ்த்தினர். தாலியே கணவன். கணவன் இல்லையேல் தாலியை அணியமாட்டாள். இக்காலத்தில் தாலியும் அதன் கொடியும் பொன்னால் செய்யப்பட்டு வருகிறது. அப்படியிருந்தும் தாலியில் பனை, சூலம், அம்மன் முதலிய குறிகள் இடப்படும் வழக்கம் தற்போதும் நிலவி வருவதை காணலாம்.

## பனையின் தொன்மை

தேம்படு பனையின் திரள் பழத்தொரு விதை என பனம் பழத்தை ஔவையார் வர்ணித்துள்ளார். கம்பராமாயணத்தின் பால காண்டப்பகுதியில் பனை உற்பத்தியின் பெருமை பற்றி பாடப்படுகிறது. அத்துடன் இராமருடைய கலியாண விருந்திற்கு வரும் வழியில் அரசர்களும் அரசிகளும் தாம் வைத்திருந்த வெள்ளிக் கிண்ணங்களில் மாலைப்பதநீர் வாங்கி சாப்பிட்டு மகிழ்ந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது.

வள்ளுவர் அறத்துப்பாலில் செய்நன்றி அறிதல் என்னும் அதிகாரத்திலும், பொருட்பாலில் குற்றங்கடிதல் அதிகாரத்திலும், காமத்துப்பாலில் புணர்ச்சி விரும்பல் என்னும் அதிகாரத்திலும் பனையை பண்பட்ட உள்ளத்திற்கு உவமானமாகக் கொண்டுள்ளார். சான்றோர்க்கும் பயிலன் 97வது செய்யுளில் பதநீர் இறக்கும் செயலைப் பாண்டிய மன்னர்கள் கும்மிப்பாட்டாகப் பாடிக் களித்துள்ளனர். திருமுறையாசிரியர் திருமூலர் பத்தாம் திருமுறையில் பனையின் பெருமையைப் பாடியுள்ளார். இத் திருக்குறள்களுக்கு கபிலர் கருத்துத் தெரிவிக்கையில் சிறிய நீர்த்துளியிலே பெரிய பனையின் பிரதி பிம்பம் அடக்குவதாக தோன்றுவதுபோல என்று கூறியுள்ளார்.

கந்தபுராணத்தில் கூட சூரன் பனைக்கொடியை தாங்கியே போர் செய்தான் எனக் கூறப்படுகிறது. சூரனைச் சிறப்பித்துக்கூறும் ஆன்றோர்கள் சூரன் பனைக்கொடியுடையோன் என்றழைக்கின்றனர். மேலும் பனைத்தொழிலின் வரலாற்றினை ஆராய்ந்த உயிரியல் சுவட்டு ஆய்வாளர்கள், மனித நாகரீகம் தோன்றிய கி.மு.10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே பனைத்தொழில் புரிந்ததற்கான சான்றுகள் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

பனைமரத்தின் ஓலைகளில் 'பிழா' என்று அழைக்கப்படும் ஒரு கலம் செய்யப்பட்டு அதில் கூழ், கள்ளு என்பனவற்றை சுத்தமாக அருந்துவதற்கு பயன்படுத்தினர். அத்தோடு சாப்பிடுவதற்கு 'தட்டுவம்' என்ற ஒன்றினை இளம் பனை ஓலையிலிருந்து செய்து பயன்படுத்தினர். கபிலர் என்னும் புலவர் தமது நற்றினை243 ஆம் பாடல் மூலமாக பிழா பற்றியும், தமிழர்கள் தமது உணவை எப்படி உண்டனர் எனவும் பாடியுள்ளார். ஆவூர்கூலங்கிழார் என்னும் புலவர் தட்டுவம் தூய்மைமிக்கது எனக்குறிப்பிட்டுள்ளார்.

18ஆம் நூற்றாண்டு வரை தமிழர்கள் வாழும் பல இடங்களில் பிழா, தட்டுவம் என்பன பாவனையிலிருந்தது. பின்னர் அது அருகி முற்றாக இல்லாமற் போனது. ஆயினும் தற்போது மேலைநாட்டவர்கள் இதில் கவனஞ்செலுத்தி மீளவும் பாவிக்கின்ற நிலை உள்ளது.

வட இலங்கையில் பனை எவ்வாறு வந்தது என்பதனை யாழ்ப்பாண மன்னர்களிலொருவரான செகராசசேகரின் சபைப்புலவர் வையாபுரிஐயர் தமது 12ஆம் 13ஆம் பாடல்களில் பாடியுள்ளார். இராவணன் இறந்தபின் முடிசூடிக் கொண்ட விபூஷனன் முன்னிலையில் கண் இல்லாத யாழ்பாடி தன் திறமையான யாழ் வாசிப்பிற்காக ஒரு மணற்றிடலினை பரிசாக பெற்றான். அதனை திருத்தி வேறு எவற்றுடனும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாத கற்பகதருவான பனையினையும் ஏனைய தாவரங்களையும் நடுகை செய்தான் எனக் கூறுகிறது. இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் தமிழரசு இருந்தது எனவும் இக்காலம் கி.மு 101 ஆம் ஆண்டாக இருக்கும் எனவும் யாழ்ப்பாணம் என்ற பெயர் யாழ்பாடியின் தொடர்பாகவே ஏற்பட்டது என்பதையும் பனை வளத்துடனேயே யாழ்ப்பாணக் குடியேற்றம் நடைபெற்றுள்ளது என்பதையும் வரலாற்று ஆவணங்களூடாக அறியக்கூடியதாக உள்ளது.

பனைவளம் பற்றி ஆராயும் போது அதன் தொன்மை மற்றும் தமிழர்களுடன் பனை எவ்வாறு பின்னிப்பிணைந்திருந்தது என்று ஆய்வு செய்யும் போது பின்வரும் சான்றுகள் அதற்கு

வலுச்சேர்க்கின்றன. காகிதம் இல்லாத காலத்தில் ஓலைச் சுவடியாக எழுதுவதற்கு பனை ஓலைகள் பயன்பட்டன; பெரும்பாலான சித்தவைத்திய முறைகள், இதிகாசங்களான மகாபாரதம், இராமா யணம், வேதசாத்திரம், திருமுறைகள், காளிதாசனின் சாகுந்தலம், வள்ளுவரின் திருக்குறள், தமிழ்ச் சங்கம் தந்த தொல்காப்பியம் சகல இலக்கண இலக்கியங்கள் யாவும் இப்பனை ஓலையில் எழுதப்பட்டன. எழுதுவதற்கு பயன்பட்ட ஓலை 'ஏடு' என சிறப்பித்துக் கூறப்பட்டது. இதனால் பனையின் மறுபெயர் ஏடகம் எனப்பட்டது.

பனையின் தொன்மை பற்றி மேலும் மேலும் கூறிக்கொண்டு போகலாம். கற்பகதருவான பனை தமிழர் வாழ்வில் எவ்வாறு பயன்பட்டுள்ளது என அறிந்தோம். அதுமட்டுமல்ல தமிழர்கள் குடியிருப்பு வேலிகளை அடைப்பது முதற்கொண்டு பாவனைப்பொருட்கள் பலவற்றுக்கு பனையை பயன்படுத்தினர். வரண் நிலத்திற்கு பொருத்தமான பனையின் வளம் பற்றி ஆராயும் இவ்வேளையில் பனையின் பயன்பாடுகள் பற்றியும் நாம் ஆராய்வது முக்கியம்.

## பனையின் பயன்கள்

### 1. பனையின் பருவம்

பனம் விதையில் முளை தோன்றுவதும் அது முளைத்து முற்றி கிழங்காகவதும் நாளடைவில் நார்க்கிழங்காவதும் அந்நிலை கடந்து பீலிப்பருவம் அடைவதும் ஈற்றில் வடலியாகி வளர்ந்து முதிர்ந்து பனையாவது என ஒவ்வொன்றும் பனையின் பல பருவவளர்ச்சிப் படிகளாகும்.

வடலி என்பது ஆண் பனைக்கும் பெண் பனைக்கும் பொதுவான பெயராகும். வடலிப் பருவம் கடந்து பனைப்பருவம் வரும்போது ஆண்பனையின் மட்டைகள் திரட்சியுடையவை யாகவும் பெண் பனையின் மட்டைகளைவிட பருமனுடையதாகவும் இருக்கும். ஆண்பனை ஓரளவு பருத்து நிற்கும். ஆண் பனையை அலகு என்றும் பெண் பனையை பருவம் என்றும் கூறுவர். வடலிப்பருவம் வரையுள்ள பனை யின் பருவங்களும் அவற்றின் காலங்களும் பின் வருமாறு:

1.விதைப்பருவம் - விதையிலிருந்து 22 நாள் வரை
2.முறிகிழங்கு — 22 நாளிலிருந்து 3 மாதம் வரை
3.நார்க்கிழங்கு — 3 மாதம் முதல் 4 மாதம் வரை
4.பீலிப்பருவம் - 4 மாதம் முதல் 2 வருடம் வரை
5.வடலிப்பருவம் - 2 வருடம் முதல் 10 வருடம் வரை

வடலியின் முதற்குருத்து பீலி எனப்படும். அது தனக்கு வேண்டிய உணவுடன் பாதுகாப்பான கிழங்கோடு உதயமாகிறது. கிழங்குப் பருவம் கடந்து பீலி சூரிய ஒளியை நோக்கி வந்து விரியும் தன்மையை தாலவிலாசம் என்னும் நூல் "வைத்தவிதை பாவாய்முளை கிழம்பி பாம்பாடிடும் பருவம்' என்று குறிப்பிடுகிறது.

### 2. பனையின் வளர்ச்சி

பனை 10 வருடம் - 25 வருடம் வரை நன்றாக வளருகிறது. ஆண்டுதோறும் 3 அடி வளர்ச்சிக்கு குறையாமல் இப்பருவத்தில் வளரும் எனக் கூறப்படுகிறது. 25 ஆண்டு முதல் 45 ஆண்டு வரை அதன் வளர்ச்சி வேகம் குறைகிறது. ஆண்டு ஒன்றிற்கு 1 அடி வளர்ச்சி உண்டாகிறது. 45 வருடம் முதல் 60 வருடம் வரை வளர்ச்சி வேகம் குறைந்து வைரம் உண்டாக ஆரம்பிக்கிறது.

### 3. பனையின் வைர வளர்ச்சி

பனையின் வயதும் அக்காலத்தில் ஏற்படும் வைர வளர்ச்சியும் பின்வருமாறு:

40-45 1'-1 1/2' வரை
45-60 2'-4' வரை
60-90 5'-6' வரை
90-120 6'-7' வரை

பனையின் புறத்தில் வைரம் உள்ளது. புறவைரமுள்ள மரங்களில் பனை மிகவும் உறுதியானது. அதிக பாரத்தை தாங்கக் கூடியது. உட்சோத்தி மிகவும் குறைந்தது. 1 கன அடி பனை வைரம் 50 இறாத்தல் நிறையுடையது எனக் கணிக்கப்பட்டுள்ளது. உட்சோத்தி மிகவும் குறைவான பனை மிகவும் வைரம் கூடியதாக இருக்கும்.

## பனையின் பயன்பாடுகள்

வடலிப்பருவத்தில் பனை ஓலைகள் மயில்தோகை போன்று காணப்படும். இவ் ஓலைகளில் அழகான விசிறிகள் செய்து வருவாய் ஈட்டுவோர் பலர். இவ் ஓலைகள் கால் நடைகளுக்கு உணவாகின்றன. இப்பருவத்தில் பெறப்படும் கங்கு மட்டைகளில் சிறந்த தும்பு பெறப்படுகிறது. இத்தும்பில் கருந்தும்பு மிகவும் கூடிய சந்தை வாய்ப்பை பெறுகிறது. இக்கங்கு மட்டை தும்பிலிருந்து துடைப்பம், கயிறு, கால்மிதி என்பன உற்பத்தியாக்கலாம். கருக்கு வடலி தோன்றும் போது பனைக்கு 10 வயது ஆகும். அவ்வேளை வடலியின் உயரம் 6 அடி வளர்ந்து பனைப்பருவத்தை அடைந்து அழகாக இருக்கும்.

**1. ஓலை**

வளர்ந்த பனையின் குருத்தோலைகளை வெயிலில் காயவிட்டு பத்திரப்படுத்தி வைக்க முடியும். அவை பெட்டி, கடகம், அலங்காரப் பொருட்கள் என்பன செய்வதற்கு பயன்படுகின்றன. குருத்தோலை 'சார்வு' என அழைக்கப்படுகிறது. இச்சார்விலிருந்து எடுக்கும் ஈர்க்கிலிருந்து கூடைகள், பூக்கூடை, சந்தைக்கூடைகள் என்பன உற்பத்தி செய்து வருமானம் பெறும் உற்பத்தியாளர்கள் பலர் உள்ளனர். இதைவிட ஓலைக்கு வர்ணச்சாயம் இட்டு அலங்காரப்பூக்கள் மற்றும் பல்வேறு அலங்காரப்பொருட்கள் பல உற்பத்தி செய்து விற்பனை செய்து வருமானம் ஈட்டுபவர் பலர் உள்ளனர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் வெங்காயம் சிறுசிறு அளவாகக் கட்டுவதற்கு சார்வு ஈர்க்கு பயன்படுவது குறிப்பிடத்தக்கது. முற்றிய ஓலையினை தோட்டங்களில் பரப்பிவிட்டு பின்னர் அவற்றை தாழ்ப்பதன் மூலம் மண் வளமாவதுடன் களைகள் கட்டுப்படுவதாக அனுபவம் வாய்ந்த விவசாயிகள் கூறுவர்.

**2. மட்டை**

முற்றிய ஓலையின் மட்டைகள் பச்சையாக இருக்கும்போது அவற்றிலிருந்து நார் உரித்தெடுக்கப்படுகின்றது. இதை பக்குவமாகக் காயவிட்டு நீண்ட காலத்திற்கு பாவிக்கலாம். இதிலிருந்து நார்க்கடகம் உற்பத்தி செய்யப்படும். மேலும் ஆடு, மாடுகள் கட்டுவதற்காக 'கண்ணி' எனப்படும் ஒருதடம் நாரிலிருந்து செய்யப்படுகிறது. அதை மேய்ச்சற் கயிற்றுடன் கட்டுவதன் மூலம் ஆடுஇமாடு என்பன சிக்குப்படாமல் தமது உணவை மேய்ந்து கொள்ளும். இந்நடைமுறை பெரிதும் அருகிவிட்டது. மிகுதிக் கழிவானமட்டைகளை சிறந்த எரிபொருளாக பயன்படுத்தலாம்.

**3. மரம்**

முதிர்ந்த மரங்களிலிருந்து வீட்டிற்கு தேவையான மரம் சிலாகை என்பன பெறப்படும். மரம் சிலாகை உற்பத்தி செய்யும் போது பெறப்படும் கழிவை 'சிராம்பு' எனக்கூறுவர். இதை நல்ல எரிபொருளாகவும் பயன்படுத்தினர். எமது முன்னோர்கள் இவ்வாறாக தமக்கு இலவசமாக கிடைத்த மூலப்பொருட்களை நன்கு பயன்படுத்தினர். அதுமட்டுமல்ல பனையிலிருந்து உணவுப்பொருட்களையு செய்தனர்.பல்வேறு வடிவங்களில் உணவாக, தாகம் தீர்க்கும் பானங்களாக பனையை எவ்வாறு பயன்படுத்தினர் என்பதை பின்னர் பார்க்கலாம்.

●

## இலங்கை மீண்டும் வறுமை நிலைக்கு தள்ளப்படலாம் – உலக வங்கி எச்சரிக்கை

*இலங்கையின் பொருளாதாரம் ஒரு நிலையான தன்மையை ஏத்தியுள்ளது என கருதப்பட்டாலும் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் மீண்டும் வறுமைக்குள் சிக்கிக் கொள்ளும் அபாயம் உரு வாகியுள்ளதாக உலக வங்கி எச் சரித்துள்ளது.*

*2025 ஆம் ஆண்டிற்குரிய இலங்கைக்கான அபிவிருத்தி அறிக் கையை வெளியிடும் போதே உலக வங்கி இந்த தகவலை தெரிவித்து இருக்கிறது.*

*இலங்கையின் பொருளாதார குறிப்பிட்ட அளவில் மாறுபாடுகளை காட்டி வருகின்றது என்று நாங்கள் நம்பிக் கொண்டிருக்கிற போது உலக வாங்கினால் வெளியிடப்பட்டிருக்கும் இந்த செய்தியானது மக்களுக்கு ஒருவித அச்சத்தையும் அரசாங்கம் மீதான நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தியிருக்கிறது.*

*நாட்டில் வறுமை அல்லது வறுமை கோட்டிற்கு உள்ளாகும் நிலை அதிகரித்துள்ளதாக உலக வங்கி மேலும் சுட்டிக் காட்டி இருப்பது மக்களிடத்தில் ஒரு எச்சரிக்கை உணர்வை உண்டு பண்ணி இருக்கிறது. இதற்கெல்லாம் மாற்றி விடாத வழிகளை நாங்கள் கண்டுபிடிக்க வேண்டும் என்றால் தற்சார்பு பொருளாதாரத்தில் எங்களை நாங்கள் வளர்த்துக் கொள்வதே தலையாய செயல் பாடாக அமையும் என்பதில் ஐயமில்லை.*

# மருதம் பசுமை நகர்

## *Marutham Green City*

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




**A** – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

**B** – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)

**C** – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

